**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S. 80/2018**

2025—ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.3 லட்சுமி, வயது 45, க/பெ குமார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இவ்வழக்கில் நான் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் எங்கள் வீட்டை மீட்க நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் ஆகிய S.சாந்தி மற்றும் P.சாந்தி ஆகிய இருவரும் வீட்டில் உரிமை கோரியுள்ளதால் நான் உரிமை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யாமல் தடை உத்தரவு பரிகாரம் மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. அது என் தாயார் வீடாகும். ஆகையால் யாருக்கும் உரிமை இல்லை. இவ்வழக்கில் நான்தான் முதல் வாதி என்றால் சரிதான். எங்கள் தரப்பில் 2வது சாட்சியாக பெரியண்ணன் என்பவர் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான்.

2. மேற்படி நபர் வழக்கில் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். பெரியண்ணன் என்பவர் என் அண்ணன் ஆவார். என்னுடைய அண்ணன் 2வது சாட்சியாக சாட்சியளித்துள்ளதால் அதன் பின்னிட்டு நான் 3வது சாட்சியாக சாட்சியம் அளிக்க மனு தாக்கல் செய்யாமல் சாட்சியம் அளிப்பது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. ஆகையால் நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.80/2018ஐ தள்ளுபடி செய்யவும், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.165/2018 வழக்கை தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. அது எங்கள் வீடாகும். என் தாயாரை பராமரித்தது நாங்கள்தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi,
District Munsif,
District Munsif Court,
Arni.